கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப.,

ந.க.எண்.1635/2021/பே2 நாள் :15.11.2021

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிருவாகம் – கோயம்புத்தூர் மண்டலம் – 2018–19 மற்றும் 2019–20 – இளநிலை உதவியாளர் உள்ளடக்கிய தொகுதி 4 பணியிடங்கள் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டது – கோயம்புத்தூர் மாவட்டப் பேரூராட்சி அலகில் பணியிடம் வழங்கப்பட்டது – தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியில் பணியாற்றி வருவது – பணிவரன்முறை செய்தும் தகுதிகாண்பருவம் துவங்கியும் ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.809/2020/பே2 நாள்.18.08.2020 செயல்முறைகள்.
2. மோப்பிரிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.159/2020 நாள்.20.10.2021.
3. ஆனைமலை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2021 நாள்.18.10.2021.
4. வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2021 நாள்.08.10.2021.
5. வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.782/2020 நாள்.21.10.2021.
6. கருமத்தமபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.444/2020 நாள்.21.10.2021.
7. கோட்டூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.254/2020/அ1 நாள்.18.10.2021.
8. ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2021 நாள்.22.10.2021.
9. சூலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2021/ஈ நாள்.21.10.2021.
10. சமத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2021 நாள்.18.10.2021.
11. இருகூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2021 நாள்.20.10.2021.

-----

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018–19 மற்றும் 2019–20ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அமைச்சு பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தை உள்ளடக்கிய தொகுதி 4 நிலையிலான பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வு முடிவுகளின்படி தெரிவு செய்யப்பட்ட பின்வரும் நபர்களுக்கு, கோயம்புத்தூர் மாவட்ட பேரூராட்சி அலகில் கலம் 3இல் கண்டுள்ள பணியிடம் வழங்கி பார்வை 1இல் செயல்முறைகளில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

/த.பி.பா

இதனைத் தொடர்ந்து, தனியர்கள் கலம் 4ல் கண்டுள்ள தேதிகளில் அவர்களது பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தில் இணைந்து நாளது வரை தொடர்ந்து பணியாற்றி வருவதால் தனியர்களது பணியினை வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கக்கோரி பார்வை 2 முதல் 11 வரையிலான இனங்களில் சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களால் கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதிக்குட்பட்ட இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடத்தில் கலம் 4இல் குறிப்பிட்டுள்ளவாறு தனியர்கள் பணியேற்றுக்கொண்ட நாள் முதல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இல் பிரிவு 28இன்படி, தனியர்களது பணியினை இப்பணியிடத்தில் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளரின் பெயர் (திருவாளர்கள்) | அமைச்சுப் பணித் தொகுதியில் வழங்கப்பட்ட பணியிடம் | அமைச்சுப் பணித் தொகுதியில் பணியில் இணைந்த நாள் | அமைச்சுப் பணித் தொகுதியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பி.ஹேமா | இளநிலை உதவியாளர், மோப்பிரிபாளையம் பேரூராட்சி. | 01.09.2020 மு.ப. | 01.09.2020 மு.ப. |
| 2 | டி.திவ்யா | இளநிலை உதவியாளர், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் பணியில் இணைந்து தற்போது பணியிட மாறுதலில் ஆனைமலை பேரூராட்சி. | 08.09.2020 மு.ப. | 08.09.2020 மு.ப. |
| 3 | எ.பிரபு | வரித்தண்டலர், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி. | 28.08.2020 மு.ப. | 28.08.2020 மு.ப. |
| 4 | பி.மோகன் | இளநிலை உதவியாளர், வெள்ளலூர் பேரூராட்சி. | 01.09.2020 மு.ப. | 01.09.2020 மு.ப. |
| 5 | ஆர்.சௌந்தர்யா | வரித்தண்டலர், கருமத்தம்பட்டி பேரூராட்சி. | 01.09.2020 மு.ப. | 01.09.2020 மு.ப. |
| 6 | எ.அம்சா | இளநிலை உதவியாளர், கோட்டூர் பேரூராட்சி. | 01.09.2020 மு.ப. | 01.09.2020 மு.ப. |

/த.பி.பா

| வ. எண். | பணியாளரின் பெயர் (திருவாளர்கள்) | அமைச்சுப் பணித் தொகுதியில் வழங்கப்பட்ட பணியிடம் | அமைச்சுப் பணித் தொகுதியில் பணியில் இணைந்த நாள் | அமைச்சுப் பணித் தொகுதியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 7 | ஜெ.காளிதாஸ் | இளநிலை உதவியாளர், ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சி. | 28.08.2020 மு.ப. | 28.08.2020 மு.ப. |
| 8 | கே.ஜெயந்தி | வரித்தண்டலர், சூலூர் பேரூராட்சி. | 02.09.2020 மு.ப. | 02.09.2020 மு.ப. |
| 9 | எஸ்.முத்துலட்சுமி | வரித்தண்டலர், சமத்தூர் பேரூராட்சி. | 01.09.2020 மு.ப. | 01.09.2020 மு.ப. |
| 10 | எஸ்.உமாமகேஸ்வரி | இளநிலை உதவியாளர், இருகூர் பேரூராட்சி. | 04.09.2020 மு.ப. | 04.09.2020 மு.ப. |
| 11 | ஜெ.ராஜன் | வரித்தண்டலர், ஆனைமலை பேரூராட்சி. | 02.09.2020 மு.ப. | 02.09.2020 மு.ப. |

தனியர்களது பெயருக்கெதிரே கலம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இப்பணியிடத்தில் தகுதிகாண்பருவம் துவங்கியும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

தனியர்களது பெயருக்கெதிரே கலம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் அடங்கியுள்ள ஈராண்டு காலத்திற்குள் தகுதிகாண்பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேற்காணும் தகுதிகாண்பருவகாலத்திற்குள், தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 34(a) பிற்சேர்க்கை V-இன்படி, பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

/த.பி.பா

மேலே குறிப்பிட்டவாறு, தகுதிகாண்பருவம் துவங்கப்பட்ட நாள் முதல் ஈராண்டு தகுதிகாண்பருவ காலம் மற்றும் கால நீட்டிப்பிற்கு தகுதியான மூன்றாண்டு காலம் ஆகமொத்தம் ஐந்தாண்டு காலத்திற்குள் இத்தகுதியினை பெற்றிருக்காதபட்சத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இல் பிரிவு 31 மற்றும் 32 ஆகியவற்றின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கோயம்புத்தூர்.

3/3

பெறுநர்
சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் /
வரித்தண்டலர்கள்,
கோயம்புத்தூர் மாவட்டம்.
(தொடர்புடைய செயல் அலுவலர்கள் மூலமாக)

நகல் :
1. பேரூராட்சிகளின் ஆணையாளர், சென்னை.
2. செயல் அலுவலர், மோப்பிரிபாளையம் / ஆனைமலை / வேட்டைக்காரன்புதூர் / வெள்ளலூர் / கருமத்தம்பட்டி / கோட்டூர் / ஒத்தக்கால்மண்டபம் / சூலூர் / சமத்தூர் / இருகூர் பேரூராட்சிகள், கோயம்புத்தூர் மாவட்டம் (தனியர்களுக்கு சார்வு செய்து சார்வு நகல் அனுப்பவும், பணிப்பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டும்)
3. பே2 இருப்பு கோப்பு.